ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2375/15 – 2024 මාර්තු මස 12 වැනි අඟහරුවාදා – 2024.03.12
2375/15 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்(அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 1986.08.13 ஆந் திகதிய 414/10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டின் 350 ஆம் இலக்க 1986.07.29 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரித்துக் காட்டப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 1986.08.13 ஆம் திகதிய 414/10 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டின் 350 ஆம் இலக்க 1986.07.29 ஆந் திகதிய கட்டளையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளினை இக் கட்டளையின் மூலம் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 03J/80/LG/773.
பிரதேச செயலாளர் இல. : කතර/3/2/එල්ජී/227.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 07.

1A – G 41577 – 09 (2024/03)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், தணமல்வில துணை மாவட்ட செயலாளர் பிரிவில் புத்தல கோறளே சிறு பிரிவில் கதரகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி பிரதேசவியல் வரைபடம் 25 இல் பிற்சேர்க்கை இல. 40 மற்றும் 1993.04.08 ஆந் திகதிய வரைபடத்தில் பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :*

*01.* ***துண்டு இல. 2064 - நிககஹவத்தை - விஸ்தீரணம் : 0.313 ஹெக்டயார்***

*வடக்கு : $1^R$ (நெடுஞ்சாலை) 2065; கிழக்கு: 2065 $1^R$; தெற்கு: $1^R$ (கம் சபா வீதி); மேற்கு: $1^R$ (கம் சபா வீதி).*

*02.* ***துண்டு இல. 2065 - பெபொல்கஹவத்தை - விஸ்தீரணம் : 0.124 ஹெக்டயார்***

*வடக்கு : $1^R$ (நெடுஞ்சாலை); கிழக்கு: $1^R$; தெற்கு: $1^R$ 2064; மேற்கு: 2064.*

*03.* ***துண்டு இல. 2066 - தேக்ககஹவத்தை - விஸ்தீரணம்: 0.149 ஹெக்டயார்***

*வடக்கு : $1^R$ (நெடுஞ்சாலை); கிழக்கு: $1^R$; தெற்கு: $1^R$; மேற்கு: $1^R$.*

EOG 03-0102

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*